**கரூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ஆணை பிறப்பிப்பவர் – இரா.மதன்குமார், எம்.ஏ, எம்.எட்.**
**மூ.மு.எண். 2490/அ1 /2022, நாள். 7 .07.2022**

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி – பள்ளிக் கல்வித்துறை – இளநிலை உதவியாளர் நேரடி நியமனம் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு தொகுதி IV தேர்வு – 2018–19, 2019–20 – தேர்வாணையம் மூலம் தேர்வு பெற்று இளநிலை உதவியாளர்களாக நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு இளநிலை உதவியாளர் பதவியில் – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்பு.

பார்வை:
1. சென்னை–3, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக்குழு செயலாளரின் கடிதம் எண்.2563/PSD-I2/2020 நாள்.21.07.2020
2. கரூர் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 5592/அ1 /2020 நாள்.18.09.2020.
3. அரசாணை எண். 101 பள்ளிக் கல்வி (வரவு செலவு) துறை நாள் 18.05.2018.
4. கடவூர் வட்டாரக் கல்வி அலுவலரின் ந.க.எண். 150 / அ 1 /2022 நாள். 03.03.2022.

------

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் பார்வை(1)ன் படி இளநிலை உதவியாளர் பணிக்கு தேர்வு செய்யப்பட்டு, பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை(2)–ல் காணும் செயல்முறைகளின்படி கரூர் மாவட்டத்தில் நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் இளநிலை உதவியாளராக பணியாற்றி வரும் கீழ்க்காணும் பணியாளருக்கு கலம் 4ல் குறிப்பிட்ட நாள் முதல் சென்னை உயர்நீதிமன்றத்தில் (சென்னை / மதுரை கிளை) நிலுவையிலுள்ள வழக்குகளில் வழங்கப்படும் முடிவான தீர்ப்புக்கு கட்டுப்படல் வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பணியாளர் பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் திரு/திருமதி/செல்வி | இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 01 | ப.வேல்முருகன்,<br>இளநிலை உதவியாளர்,<br>வட்டாரக் கல்வி அலுவலகம்,<br>கடவூர், கரூர் மாவட்டம். | 21.09.2020<br>முற்பகல் | 21.09.2020<br>முற்பகல் |

அன்னார் பணிவரன்முறை செய்யப்பட்ட விபரத்தினை உடன் சம்பந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பெறப்பட்ட அன்னாரின் அசல் பணிப்பதிவேடு மற்றும் அசல் சான்றிதழ்களை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலினை அனுப்பி வைக்குமாறு கடவூர் வட்டாரக் கல்வி அலுவலருக்கு தெரிவிக்கப்படுகிறது.

7/7/22

இணைப்பு – அசல் பணிப்பதிவேடு தொகுதி – 1.

முதன்மைக் கல்வி அலுவலர்,
கரூர்.

பெறுதல் : சம்மந்தப்பட்ட பணியாளர் ( உரியவழியாக)
நகல் : வட்டாரக் கல்வி அலுவலர், கடவூர். கரூர் மாவட்டம்.

20/06/2023

தலைமை ஆசிரியர்,
அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி,
திருச்செங்கோடு – 637 211
நாமக்கல் மாவட்டம்.